அக்டோபர்: 26

## கனி

### வாசிக்க: கலாத்தியர் 5:1-25

1. அன்பாகிய கனி! மத்தேயு 5:41-48

கொடுக்காமல் அன்பு செலுத்த முடியாது. அன்பு செலுத்தாமல் கொடுக்க முடியும். அன்பு என்றாலே கொடுக்க வேண்டும். தேவன் தன்னுடைய குமாரன் இயேசுவைக் கொடுத்து அவரது அன்பை புரியவைத்தார். யோவான் 3:16. நமக்கு நன்மை செய்வோரையும் தீமை செய்வோரையும் முழுமனதோடு நேசித்து அவர்களுக்கு உதவி செய்வதே உண்மையான அன்பாகும்.

ஆதாம் ஏவாள் கீழ்படியாமல் பாவம் செய்த போது. கர்த்தர் தண்டனையை அறிவித்துவிட்டு, தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார். ஒரு விலங்கை கொன்று அதிலிருந்து தான் தோல் உடையை உண்டாக்கி இருக்க வேண்டும். அது பெரும்பாலும் ஆடாய் இருக்க கூடும். பாவத்திலிருந்து விடுதலை பெற வேண்டுமாயின் கிரயம் செலுத்த வேண்டும். உயிர் இரத்தத்தில் இருப்பதால். இரத்தம் சிந்துவது அவசியமானது. இரத்தம் சிந்தாமல் பாவமன்னிப்பில்லை. நமக்கான பாவத்துக்கு இயேசுக்கிறிஸ்த்து இரத்தம்சிந்தி மரிப்பார் என்பதன் முன்னடையாளமே இச்சம்பவம் ஆகும்.

ஆதாம் ஏவால் ஒரு உடையை தாரும் என்று கேட்கவில்லை. அவர்கள் தப்பு பண்ணியிருந்த போதும். அவர்கள் இயற்கை சீற்றங்களிலிருந்து பாதுகாப்பாய் இருக்க வேண்டும் என்று விரும்பினார். கர்த்தரின் அளவற்ற அன்பை மனித தோற்றத்திலிருந்து பார்க்கலாம். அவரின் அன்பின் உச்சமானது. தன்னுடைய ஒரே பேறான குமாரனை நமக்கு தந்ததே.

அப்பா பிதாவே என்று கூப்பிட்டு ஆராதிக்கும் பிள்ளைகளாகிய நாமும் எல்லோரையும் நேசிப்போம். இயேசப்பாவின் குணத்தை, பண்புகளை தரித்த பிள்ளைகளாய் வாழுவோம். வெறுப்பவர்களையும் நேசிப்போம்.

நாம் மற்றவர்களை நேசித்தால் நியாயப்பிரமாணத்தை (வேத வசனத்தை) நிறைவேற்றுகிறோம் என்று அர்த்தம். ரோமர் 13:8,10. நாம் மற்றவர்களிடத்தில் அன்பாய் இருந்தால் இயேசுவுக்குள் நிலைத்திருக்கிறோம் என்று அர்த்தம். 1யோவான் 4:8,16. அப்படி என்றால் நாம் மற்றவர்களை நேசிக்கவில்லை என்றால் இயேசுவுக்குள் இல்லை என்று அர்த்தம். நாம் அன்பாக இருந்தால் இயேசுவின் சீடனாக இருக்கிறோம் என்று வேதம் சொல்கிறது. யோவான் 13:35.

### கேள்விகள்:

1. தேவன் தன்னுடைய அன்பை எப்படி புரியவைத்தார்?
2. யார் இயேசுவின் சீடன்?
3. எனக்கு தீமை செய்பவர்களையும் நேசித்து நன்மை செய்ய என்னால் முடிகிறதா?